# வளங்கொழிக்கும் மன்னார்

மன்னார்ப் பட்டினம் வரலாற்றுக் காலத்துக்கு முன்பே புகழ்பெற்று விளங்கியது. இது ஈழத்துக்கு வடமேற்குத்திக்கில் உள்ளது. வன்னிப்பெருநிலத்தின் உற்பத்திப்பொருட்களுக்கு உலக வணிகத் துறையாக விளங்கியது. மன்னார்ப் பட்டினத்தின் துறைமுகம் மாதோட்டத்தில் அமைந்திருந்தது. மன்னாரில் யானைமருப்பு, மயிற்பீலி, தேன் போன்ற காடுபடு செல்வங்களும் அரிசி, ஆனைந்து, கூலங்கள் போன்ற நாடுபடு செல்வங்களும் அளவின்றிக் கிடைத்தன. மன்னாரில் வயல்கள் நிறைந்து காணப்படுகின்றன. இவ் வயல்களுக்குத் தேவையான நீர் கட்டுக்கரைக் குளத்தில் இருந்து பெறப்படுகிறது. மன்னார்க் கடற்பகுதி வற்றாத மீன் வளம் கொண்டதாகும்.

மன்னாரை அண்டிய புத்தளப்பகுதி புகழ் பெற்ற முத்துச்சலாபமாகும். மன்னார் முத்து வணிகத்துறையில் புகழ்பெற்றிருந்தது. இப்பகுதி இன்று சிலாபம் என அழைக்கப்படுகின்றது. ஐந்தீச்சுரங்களில் ஒன்றான திருக்கேதீச்சுரம் மன்னாரில் உள்ள பாலாவி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. மடுமாதா என்னும் புகழ் பெற்ற கிறித்தவ தேவாலயமும் இங்கு அமைந்துள்ளது. மன்னார் வரண்ட கருமணல் கொண்ட நிலப்பரப்பாகும். இங்கு மரமுந்திரிகை, வேம்பு, பாலை போன்ற மரங்களும் கற்றாளை, நாகதாளி, முள்ளி போன்ற பாலைநிலச் செடிகளும் காணப்படுகின்றன. மன்னார்க் கடலில் எண்ணெய் வளமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பல வளங்களைக் கொண்ட பட்டினமாக மன்னார் திகழ்கின்றது.